# டீம் குமித்தே விதிகள்

1. டீம் குமித்தேவிற்கான தகுதிகள்.
2. தண்டனைகள் -- டீமை தகுதி நீக்கம் செய்யும் முறை

## 6. டீம் குமித்தே விதிகள்

### அத்தியாயம் 1. டீம் குமித்தேவிற்கான தகுதிகள்.

1. சேஃப்டி நூன்சாக்கு டீம் களுக்கான போட்டியில், ஒவ்வொரு டீமும் ஒற்றைப்படையிலான எண்ணிக்கை உள்ளதாயிருத்தல் வேண்டும்.

2. சேஃப்டி நூன்சாக்கு டீம் களுக்கான போட்டியில், ஒரு டீமில் ஐந்து பேர் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

3. ஒவ்வொரு டீமும், இருவர் (மைனஸ்) -1.65 மீட்டர் உயரமும், மூவரும் +1.65 மீட்டர் உயரமும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

4. ஒவ்வொரு போட்டியாளரும் ஒரே சேஃப்டி நூன்சாக்கு பள்ளி/கிளப்பை சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

5. ஒவ்வொரு டீம் போட்டி ஆரம்பிக்கப்படும் முன்னரும், குழுவின் பயிற்சியாளர் அல்லது நியமனம் பெற்ற பிரதிநிதி, வரிசைக்கிரம அறிவிப்பு படிவத்தில், வரிசைப்படி அதிகாரப்பூர்வமாக எழுதி, கையெழுத்திட்டு, போட்டி அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும். ஒரு முறை எழுதிக் கொடுத்த பின்னர், அந்த ரவுண்ட் முடியும் வரை வரிசைக்கிரமத்தை மாற்ற முடியாது.

6. எல்லாப்போட்டியாளர்களும், டீமில் உறுப்பினர்கள் ஆவர். இதில் குறிப்பான உபரி (ரிசர்வுகள்) கிடையாது.

7. வெற்றி பெற்ற டீம் என்பது அதிகமான புள்ளிகளை ஸ்கோராக பெற்றதாகும்.

8. இரண்டு டீம்களும், சமமான ஸ்கோர்களை பெற்றிருந்தால், அதிகமான இப்பான்களை பெற்ற டீமிற்கு வெற்றி கொடுக்கப்படும். அதிலும் சமமாக இருப்பின், இரண்டு டீமிலும் வெற்றி பெற்ற போட்டியாளரைக் கொண்டு வெற்றி கொடுக்கப்படும். அதிலும் சமமாக இருப்பின், இரண்டு டீமிலும் பெற்ற தண்டனைகள் அடிப்படையில் வெற்றி உறுதிசெய்யப்படும். அதிலும் முடிவு எட்ட முடியவில்லை என்றால், 'அந்தெ' மூலம் வெற்றி அறிவிக்கப்படும்.

9. டீம் குமித்தே போட்டியில், பாதி போட்டியாளர்களுக்கு மேல் இருந்தால் தான் அந்த டீமானது முழுமையானதாக கருதப்படும். அதாவது 5 போட்டியாளர்களில் பாதியாக 3 போட்டியாளருக்கு மேல் இருந்தால் தான் அந்த டீமானது, டீம் குமித்தே போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

10. டீம் போட்டியின் போது ஒரு போட்டியாளர் வரவில்லையென்றால், எதிரியானவர் வெற்றி பெற்றவராக கருதப்பட்டு, 3 இப்பான்ஸ், அதாவது 6 புள்ளிகள் வழங்கப்படும்.

11. தனிநபர் குமித்தே போட்டியிலோ அல்லது டீம் குமித்தே போட்டியிலோ கீழ்க்கண்டவாறு களத்தில் இறங்கலாம்.

அ) 1.75 மீட்டர் உயரமுள்ள போட்டியாளர், -1.85 உயரமுள்ள பிரிவில் போட்டியிடலாம்.

ஆ) ஆனால் 1.75 மீட்டர் உயரமுள்ள போட்டியாளர், +1.85 உயரமுள்ள பிரிவில் போட்டியிட முடியாது.

12. டீம் குமித்தே போட்டியில் கலந்து கொள்ள, ஆண்கள் டீம் குறைந்த பட்சம் 3 போட்டியாளர்களை கொண்டதாகவும், பெண்களின் டீமில் குறைந்த பட்சம் 2 போட்டியாளர்களை கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். தேவைப்படும் போட்டியாளர் எண்ணிக்கை குறைவு ஏற்படின் போட்டியிடும் தகுதி இழப்பர் (கிகென்)

13. டீம் போட்டிகளில், ஒரு டீம் போதிய அளவு பவுட் வெற்றிகளடைந்து விட்டாலோ அல்லது வெற்றி அடைந்து விட்டதாக அறிவிக்கப்படக்கூடிய அளவு புள்ளிகளை எடுத்து விட்டாலோ, போட்டி முடிவு பெற்றதாக அறிவிக்கப்படும். தொடர்ந்து போட்டிகள் நடைபெறாது.

14. டீம் குமித்தே போட்டியில் ரெஃப்ரி மற்றும் ஜட்ஜுகள் போட்டியாளர்களைச் சேர்ந்த நாட்டினராக இருத்தல் கூடாது.

15. டீம் குமித்தேயில், எந்த சூழ்நிலையிலும் அதிகப்படியான தொடுதலுக்குரிய டெக்னிக்கிற்கு புள்ளி அளித்தல் கூடாது.

## அத்தியாயம் 2. தண்டனைகள் -- டீமை தகுதி நீக்கம் செய்யும் முறை

1. போட்டியின் ஒரு 'ரவுண்ட்' தொடங்கும் முன் எழுத்து மூலமாக அனுமதிபெறாமல் போட்டியிடும் உறுப்பினர்களோ அல்லது அவர்களின் பயிற்சியாளரோ, அந்த அணியின் (டீம் உறுப்பினர்களை மாற்றினாலோ அல்லது வரிசைக்கிரமத்தை மாற்றினாலோ அந்த அணி தகுதியிழக்கும்.

2. வரிசைக்கிரம அறிவிப்பு படிவத்தில் தவறுகள் நேர்ந்து தவறான போட்டியாளர் வெற்றி பெற்றால் அந்தப்போட்டி சட்ட விரோதமானதாக அறிவிக்கப்படும். அதை தெரிந்து கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு போட்டியிலும் வெற்றியடைந்தவர்கள் தங்களது வெற்றியை, போட்டி நடத்தும் மேஜையிலுள்ளவர்களிடம் கேட்டு உறுதி செய்து கொண்டு களத்தில் இருந்து வெளியேற வேண்டும்.

3. போட்டியின் போது, போட்டியில் பாதியில், ரெஃப்ரியின் அனுமதியில்லாமல் வெளியேறும் போட்டியாளர் மீது ரெஃப்ரி பேனலானது தக்க ஒழுங்க நடவடிக்கை எடுக்கும்.